முருகப்பெருமான் துணை

**மகான் ரோமரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.01.2023, செவ்வாய்கிழமை

1. அறமெனும் சக்திதனை கொண்ட
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   வரமென உன் பெருமை கூறி
   வழங்குவேன் அனுகூல ஆசி
2. ஆசிதனை சுபகிருது கலை திங்கள்
   அறிவிப்பேன் சூல திகதி குசன் வாரம்
   (சுபகிருது வருடம் தை மாதம் 03 ம் நாள் 17.01.2023, செவ்வாய்கிழமை)
   ஆசிதனை ரோமரிஷி யானம்
   அறிவிப்பேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் மெய்ஞான வழியாம்
   ஞான தேசிகனின் சன்மார்க்க நெறியை
   வளம் காண உலகோர் ஏற்று
   வணங்கிக் கடைபிடித்துவருதல் காண
4. காணவே மக்களிடை குருவருள்
   கந்தப் பெருமான் அருளாக வந்து
   ஞானமாம் அழியாமை தன்னை
   நம்பிக்கைபட தந்தருளக் கூடும்
5. கூடவே இந்தவித மார்க்கம் தனை
   குறைவிலா தொண்டர்களாகி மக்கள்
   நாடெங்கிலும் கொண்டு செல்லவே
   ஞானவான்கள் படை பெருகி
6. பெருகியே ஞானத் தலைமை தானும்
   பேருலகம் இனிதே அடைந்து
   தரும ஞான ஆட்சியாக
   தலைவன் முருகன் ஆட்சியாக
7. ஆட்சியாக மாற்றம் காணும்
   ஆக்கமான இந்தவித அற்புதத்தை
   மாட்சிமைபட அரங்கமகான் நிகழ்த்தி
   மக்களை மீட்க இருக்க
8. இருக்கவே இனியும் காலம் கடந்து
   ஏழாம்படைவீடாம் பிரணவக்குடிலை
   கருத்தாக உலகோர் அடைந்து
   காப்பாய் மீட்பாய் என வேண்டி
9. வேண்டி முழு சரணாகதியை
   வேலவா என முழங்கிக் கொண்டு
   தொண்டுவழி இணைந்து வர
   தொடர்ந்து அரங்கன் அன்னதான

10. அன்னதான சேவைதனை வளர்த்து
அகிலமதில் பசிபிணி வறுமைதனை
மண்ணுலகை விட்டு விரட்டவே
மக்களிடம் நற்பண்புகள் பெருகி

11. பெருகியே கலியிடரை வெல்வர்
பிரச்சினை இல்லா வாழ்வு காண்பர்
முருகப்பெருமான் தயவு துணைகூடி
முழுமைபெற்ற ஞானிகளாவர்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—